# போக்குவரத்து, நெடுஞ்சாலைகள் மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சு

## பதவி வெற்றிடங்கள் - கருத்திட்டப் பணியாட்குழு

2026 பெப்ரவரி 2 ஆம் திகதிய முகாமைத்துவச் சேவை சுற்றறிக்கை 01/2026 இன் பிரகாரம், கொழும்பு புறநகர் புகையிரதக் கருத்திட்டத்தின் (CSRP) கீழே குறிப்பிடப்பட்டுள்ள பதவிகளுக்குக் கருத்திட்டப் பணியாட் குழுவினரை ஆட்சேர்ப்புச் செய்வதற்கான விண்ணப்பங்கள் போக்குவரத்து, நெடுஞ்சாலைகள் மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சின் போக்குவரத்துப் பிரிவினால் கோரப்படுகின்றன.

**கொழும்பு புறநகர் புகையிரதக் கருத்திட்டம் (CSRP) :**

ஆசிய அபிவிருத்தி வங்கியினால் (ADB) வழங்கப்படுகின்ற கடன் உதவியின் கீழ், போக்குவரத்து, நெடுஞ்சாலைகள் மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சின் போக்குவரத்துப் பிரிவின் மற்றும் இலங்கைப் புகையிரத திணைக்களத்தின் வழிகாட்டுதலின் கீழ் 2026.12.31 ஆம் திகதி வரை இந்தக் கருத்திட்டம் செயற்படுத்தப்படும்.

கீழே தரப்பட்டுள்ள அடிப்படைத் தகைமைகளைப் பூர்த்திசெய்துள்ள, ஆங்கில மொழியில் சிறந்த தேர்ச்சி, அரசாங்க ஒழுங்கு விதிமுறைகள் தொடர்பான அறிவு, வெளிநாட்டு நிதியளிக்கப்பட்ட கருத்திட்டச் சூழலில் பணியாற்றிய அனுபவம் மற்றும் கணினி அறிவு ஆகியவற்றைக் கொண்டுள்ள இலங்கை பிரசைகளிடமிருந்து பின்வருகின்ற பதவி வெற்றிடங்களுக்காக விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

தற்போது புகையிரதத் துறையில் (விண்ணப்பிக்கின்ற பதவியுடன் தொடர்புடைய துறைகளில்) பணியாற்றுகின்ற விண்ணப்பதாரர்கள் இதற்காக விண்ணப்பிக்குமாறு ஊக்குவிக்கப்படுகின்றார்கள்.

**01. பிரதிக் கருத்திட்டப் பணிப்பாளர் (சுற்றாடல் மற்றும் சமூகப் பாதுகாப்பு)**

**வெற்றிடங்களின் எண்ணிக்கை - 01**

**B தொகுதி**

சமூகப் பாதுகாப்பு மற்றும் சுற்றாடல் கொள்கைகளைத் தயாரித்தல் , சமூகப் பாதுகாப்பு மற்றும் சுற்றாடல் திட்டங்களை உருவாக்குதல் மற்றும் அவற்றை நடைமுறைப்படுத்துவதற்கான கருத்திட்டச் செயற்பாடுகளுக்குரிய விடயங்கள் மற்றும் அலுவல்களை இனங்காணல் மற்றும் அதன் பணிப் பொறுப்புக்களை ஆற்றுவதற்குப் பொறுப்பாக இருத்தல் வேண்டும்

**02. பிரதிக் கருத்திட்டப் பணிப்பாளர் (பெறுகை)**

**வெற்றிடங்களின் எண்ணிக்கை - 01**

**B தொகுதி**

ஆசிய அபிவிருத்தி வங்கியின் வழிகாட்டல்களுக்கு இணங்க பெறுகைத் திட்டம், பெறுகைக் கொள்கை மற்றும் பெறுகை கால அட்டவணையைத் தயாரித்தல், பெறுகைக் குழுக்கள் மற்றும் தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுக்களை நியமித்தல், பெறுகை ஆவணங்களைத் தயாரித்தல் மற்றும் பெறுகை செயன்முறையை உகந்த மற்றும் சரியான நேரத்தில் செயற்படுத்துவதை உறுதி செய்தல்.

பெறுகை, ஒப்பந்தங்களைத் தயாரித்தல் மற்றும் பெறுகை தொடர்பான பொதுவான கொடுப்பனவுகள் குறித்த முடிவுகளை எடுப்பதற்கு உதவுதல் தொடர்பில் பிரதி கருத்திட்டப் பணிப்பாளர் (பெறுகை) பொறுப்புக்கூறல் வேண்டும்.

(கீழேயுள்ள தொடரிலக்கம் 01 அல்லது 02 அல்லது 03 ஆகியவற்றில் ஒரு தகைமை இருத்தல் வேண்டும்)

01. தொடர்புடைய துறையில் பட்டம்.

மற்றும்

தொடர்புடைய துறையில் பட்டப்பின் பட்டமொன்று இருத்தல்

மற்றும்

தொடர்புடைய துறைக்குரிய தொழில்சார் நிறுவனம் ஒன்றில் உறுப்பினராக இருத்தல் / அவ்வாறான நிறுவனம் ஒன்றிலிருந்து பெறப்பட்ட சமமான தொழில்சார் தகைமை,

உடன்

தகைமை பெற்ற பின்னர், குறித்த துறையில் முகாமைத்துவ மட்டத்தில் ஆகக் குறைந்தது 14 ஆண்டுகள் அனுபவம் இருத்தல் மற்றும் அதில் 07 ஆண்டுகள் சிரேஷ்ட முகாமைத்துவ மட்டத்தில் இருத்தல் வேண்டும்.

02. தொடர்புடைய துறையில் அங்கீகரிக்கப்பட்ட தொழில்சார் நிறுவனம் ஒன்றிலிருந்து பெறப்பட்ட கூட்டாண்மை/பட்டய உறுப்புரிமை அல்லது அதற்குச் சமமான தொழிற் தகைமை

உடன்

முகாமைத்துவ மட்டத்தில் ஆகக் குறைந்தது 12 ஆண்டுகள் அனுபவம் இருத்தல் மற்றும் அதில் 06 ஆண்டுகள் சிரேஷ்ட முகாமைத்துவ மட்டத்தில் இருத்தல் வேண்டும்.

03. நாடளாவிய அரசாங்க சேவை ஒன்றில் தரம் 1 அலுவலர் ஒருவராக இருத்தல் அல்லது தொடர்புடைய துறையில் அதற்குச் சமமான பதவியொன்றை வகித்தல்.

மற்றும்

தொடர்புடைய துறைக்குரிய தொழில்சார் நிறுவனம் ஒன்றில் உறுப்பினராக இருத்தல் / அவ்வாறான நிறுவனம் ஒன்றிலிருந்து பெறப்பட்ட சமமான தொழில்சார் தகைமை,

உடன்

முதலாம் தரத்தின் பதவியொன்றில் ஆகக் குறைந்தது 06 ஆண்டுகள் அனுபவம் இருத்தல்.

**03. பெறுகை விசேட நிபுணர்**

**வெற்றிட எண்ணிக்கை - 1**

**C தொகுதி**

பெறுகைத் திட்டங்களைத் தயாரித்தல், ஆசிய அபிவிருத்தி வங்கியின் வழிகாட்டுதல்களின் படி பெறுகை கொள்கைகளைத் தயாரித்தல், பெறுகைக் குழு மற்றும் தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவை நியமனம் செய்தல், ஆசிய அபிவிருத்தி வங்கியின் வழிகாட்டுதல்களின் படி பெறுகை ஆவணங்களைத் தயாரித்தல், ஒப்பந்தங்களைத் தயாரித்தல் போன்றவற்றுக்குப் பொறுப்பாகச் செயற்படுதல் வேண்டும்

(கீழேயுள்ளவற்றில் 01 அல்லது 02 அல்லது 03 ஆகியவற்றில் ஒரு தகைமை இருத்தல் வேண்டும்)

01. பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட சம்பந்தப்பட்ட துறையில் பட்டமொன்று.

மற்றும்

தொடர்புடைய துறையில் பட்டப்பின் பட்டமொன்று இருத்தல்

மற்றும்

தொடர்புடைய துறைக்குரிய தொழில்சார் நிறுவனம் ஒன்றின் உறுப்பினராகவிருத்தல் / அவ்வாறான தொழில்சார் நிறுவனம் ஒன்றிலிருந்து பெறப்பட்ட அதற்குச் சமமான தொழில் தகைமை

உடன்

தகைமை பெற்ற பின்னர், தொடர்புடைய துறையில் முகாமைத்துவ மட்டத்தில் ஆகக் குறைந்தது 13 ஆண்டுகள் அனுபவம்

02. தொடர்புடைய துறையில் அங்கீகரிக்கப்பட்ட தொழில்சார் நிறுவனம் ஒன்றிலிருந்து பெறப்பட்ட கூட்டாண்மை/பட்டய உறுப்புரிமை அல்லது அதற்குச் சமமான தொழிற் தகைமை

மற்றும்

தகைமை பெற்ற பின்னர் குறித்த துறையில் முகாமைத்துவ மட்டத்தில் ஆகக் குறைந்தது 10 ஆண்டுகள் அனுபவம்

03. நாடளாவிய அரசாங்க சேவை ஒன்றில் தரம் I இன் அலுவலராக இருத்தல் அல்லது

தொடர்புடைய துறையில் அதற்குச் சமமான பதவியொன்றை வகித்தல்

மற்றும்

தொடர்புடைய துறைக்குரிய தொழில்சார் நிறுவனம் ஒன்றில் உறுப்பினராக இருத்தல் / அவ்வாறான நிறுவனம் ஒன்றிலிருந்து பெறப்பட்ட அதற்குச் சமமான தொழிற் தகைமை

உடன்

தரம் I இன் பதவி ஒன்றில் ஆகக் குறைந்தது 05 ஆண்டுகள் அனுபவம் இருத்தல்.

மேற்படி தகைமைகள் தொடர்பான மேலதிகத் தகவல்களுக்காக முகாமைத்துவச் சேவைகள் சுற்றறிக்கை இல 01/2026 இன் இணைப்பு 01 அட்டவணையில் விண்ணப்பம் செய்கின்ற பதவிக்குரிய மூன்றாம் நிரலின் கீழான தகைமைகளைப் பார்க்கவும்.

**சம்பள மட்டம்:**

| | | |
|---|---|---|
| 01 | வகை B | 370,000- 2*10,000 - 390,000 |
| 02 | வகை C | 285,000 - 2*10,000 - 305,000 |

இதற்கு மேலதிகமாக 2026 பெப்ரவரி மாதம் 02 ஆம் திகதிய நிதி அமைச்சின் முகாமைத்துவ சேவைகள் சுற்றறிக்கை இல 01/2026 இல் உள்ள விதிகளின் பிரகாரம் கொடுப்பனவு செய்யப்படுகின்ற அரசாங்கத்தால் அங்கீகரிக்கப்பட்ட படிகள் சகிதமானது.

**பொது நிபந்தனைகள்:**

01. வயது எல்லை: 64 வயதுக்குக் குறைவாக இருத்தல் வேண்டும் (64 வயதிற்கு மேற்பட்டவர்கள் கருத்தில் கொள்ளப்பட மாட்டார்கள்).

02. ஊழியர் சேமலாப நிதியத்திற்குப் ஊழியரின் பங்களிப்பு 08மூ மும் மற்றும் தொழில் வழங்குநரின் பங்களிப்பு 12% மும் ஆகுமென்பதோடு, ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்திற்கான பங்களிப்பு மாதாந்த சம்பளத்தில் 3% மும் ஆகும்.

03. **பணியில் அமர்த்துதல் தொடர்பான விதிமுறைகள் :** நியமனம் 2026.12.31 ஆம் திகதி வரை ஒப்பந்த அடிப்படையில் வழங்கப்படுவதோடு, கருத்திட்டத்தின் காலப்பகுதி நீட்டிப்புச் செய்யப்பட்டால் மாத்திரம் திருப்திகரமான செயலாற்றுகைக்கு அமைய சேவையைக் காலநீடிப்புச் செய்வதற்கான சாத்தியப்பாடு காணப்படுகின்றது.

**விண்ணப்பித்தல்:**

அனைத்து விண்ணப்பதாரர்களும், உறவினரல்லாத இரண்டு பரிந்துரையாளர்களின் பெயர்களை உள்ளடக்கியதாகத் தயாரிக்கப்பட்ட சுய விபரத் தகவல் படிவம், அனைத்துச் சான்றிதழ்களின் பிரதிகள் சகிதம் கீழே தரப்பட்டுள்ள முகவரிக்கு 2026.03.13 ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் கிடைக்க கூடியவாறு பதிவுத் தபாலில் அனுப்பிவைத்தல் வேண்டும். அத்தினத்திற்குப் பின்னர் கிடைக்கப் பெறுகின்ற விண்ணப்பங்கள் கவனத்தில் கொள்ளப்பட மாட்டாது

விண்ணப்பப் படிவம் உள்ளடக்கப்பட்ட கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில், விண்ணப்பிக்கும் பதவியின் பெயரைத் தெளிவாகக் குறிப்பிடுதல் வேண்டும். தற்போது அரச அல்லது பகுதியளவு அரச சேவைகளில் ஈடுபட்டுள்ள விண்ணப்பதாரர்கள் தங்களது விண்ணப்பப் படிவங்களைத் தமது நிறுவனத் தலைவர்கள் ஊடாக அனுப்பிவைத்தல் வேண்டும்.

**மேலதிகத் தகவல்களுக்காக -**
**தொலைபேசி : 011-2187211**
**தொலைநகல் : 011-2187205**
**மின்னஞ்சல் முகவரி : admin@transport.gov.lk**

**செயலாளர்,**
**போக்குவரத்து,நெடுஞ்சாலைகள் மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சு. (போக்குவரத்துப் பிரிவு)**
**7ஆம் மாடி, செத்சிறிபாய,**
**II ஆம் கட்டம்,**
**பத்தரமுல்லை.**
**2026.02.27**